<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்</u>

<u>முன்னிலை திரு.பொ. மகாராஜன், எம்.எல்.,</u>

<u>வாடகை கட்டுப்பாட்டாளர்/மாவட்ட உரிமையியல் நீதிபதி,</u>

<u>2025ம் வருடம் டிசம்பர் திங்கள் 06நாள் சனிக்கிழமை</u>

<u>E.P.No. 23/2025</u>

<u>in</u>

<u>RCOP.No. 159/2015</u>

---------

திருமதி. சிவபாக்கியம் ஜெகதீசன். ....மனுதாரர்/வீட்டு உரிமையாளர்

/எதிர்/

பாஸ்கர சேதுபதி. ...எதிர்மனுதாரர்கள்/வாடகைதாரர்

இம்மனு என் முன்பாக கடந்த 24.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.மீனாட்சி சுந்தரம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பார்த்திபன் அவர்கள் முன்னிலையாகி போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் பரிசீலனைக்காக என் முன்பு இருந்து வந்ததுமான இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>உத்தரவு</u>

மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21, விதி 35 மற்றும் பிரிவு 151–ன் கீழ் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1. மனுவின் சுருக்கம்:–</u>

1.1) மனுதாரர் சார்பாக மாண்புமிகு. மதுரை டவுன், வாடகைக் கட்டுப்பாட்டாளர்/கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில்

RCOP.No.159/2015–என்ற எண்ணில் 28.11.2018ம் தேதி பிறப்பிக்கப்பட்ட நிறைவேற்றாணையின்படி, தாவா சொத்தில் நீதிமன்ற அமினா மூலம் எதிர்மனுதாரர்/வாடகைதாரர் சுவாதீனத்தை நீக்கி இந்த மனுதாரர்/வீட்டு உரிமையாளர் வசம் நிர் வில்லங்கமன்னியில் ஒப்படை செய்ய கேட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலையாகிய நிலையில் போதிய வாய்ப்பு வழங்கப்பட்டபோதும், எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. மனுதாரர் மனு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**4. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.**

ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, மனுதாரர் தரப்பில் இந்த நீதிமன்றத்தில் RCOP.No.159/2015–என்ற எண்ணில் 28.11.2018ம் தேதி பிறப்பிக்கப்பட்ட நிறைவேற்றாணையின்படி, தாவா சொத்தை எதிர்மனுதாரர் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் காலி செய்து மனுதாரர்/உரிமையாளர் வசம் சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5. மனுதாரர் சார்பில் RCOP.No.159/2015–என்ற எண்ணில் பிறப்பிக்கப்பட்ட நிறைவேற்றாணையை நிறைவேற்ற கேட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, நிறைவேற்றாணையின்படி, தாவா சொத்தை காலி செய்துவிட்டதாகவோ அல்லது மேற்படி நிறைவேற்றாணைக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு தடையுத்தரவு பெறப்பட்டதாகவோ எந்தவொரு எதிர்வாதமும் எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்படவில்லை.

6. மேலே கண்டவற்றை பரிசீலனை செய்து பார்க்கும்போது, RCOP.No.159/2015–என்ற மனுவில், 28.11.2018ம் தேதி பிறப்பிக்கப்பட்ட நிறைவேற்றாணையின்படி, தாவா சொத்தின் சுவாதீனத்திலிருந்து எதிர்மனுதாரரை நீதிமன்ற அமினா மூலம் அகற்றி அதன் சுவாதீனத்தை மனுதாரரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. தேவைப்படும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட இடத்தின் கிராம நிர்வாக அலுவலர், சர்வேயர் உதவியை பெற்றுக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. தேவைப்படும்பட்சத்தில், தாவா சொத்தின் கதவை உடைக்க உத்தரவிடப்படுகிறது.

7. முடிவாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

For Compliance. Call on. 05.01.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2025 ஆண்டு டிசம்பர் திங்கள் 06ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(திரு.பொ. மகாராஜன்.எம்.எல்.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்

மனுதாரர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் – இல்லை.
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் – இல்லை.

(திரு.பொ. மகாராஜன்.எம்.எல்.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
மேலூர்
E.P.No.23/2025
in
RCOP.No.159/2015
சீரான/வரைவு உத்தரவு
நாள் 06.12.2025